## Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 46/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | |
| பெயர். | - | விமலாஸ்ரீ | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | பன்னீர்செல்வம் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | 35 |

03.09.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அரசூரில் வசிக்கிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வீரன் எனது தாத்தா. 13.02.2019 ல் மதியம் 01.00 மணியளவில் எனது பெரியப்பாவின் சாவிற்காக சென்னையிலிருந்து ஆனைவாரி கிராமத்திற்கு வந்துவிட்டு மீண்டும் அரசூர் செல்வதற்காக மதியம் 01.00 மணியளவில் ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது ரோட்டை கடப்பதற்காக முயற்சி செய்த போது சென்னையிலிருந்து திருச்சி நோக்கி வந்த டெப்போ வாகனம் நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. எனக்கு இடுப்பில் எலும்பு முறிவும், தலையில் காயமும் ஏற்பட்டது. எனது தாத்தா உயிர் நாடியில் காயம் ஏற்பட்டது. ஆட்டோ ஓட்டுநருக்கு மார்பு எலும்பு உடைந்துவிட்டது. பின்பு ஆம்புலன்ஸ் மூலம் காயமடைந்த எங்களை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். எனது தாத்தா மருத்துவமனைக்கு செல்லும்போதே இறந்துவிட்டார்

3. நான் முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலிருந்து சென்னையில் ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான்

முண்டியம்பாக்கம் மருத்துவமனையில சிகிச்சை எடுக்கும் போது போலீசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். நான் பயணம் செய்த ஆட்டோவின் பதிவெண்ணும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணும் எனக்கு தெரியாது. விபத்து ஏற்பட்டவுடன் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அங்கிருந்தவர்கள் பிடித்துவிட்டார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் வாக்குமூலத்தை யார் எழுதியது போலீசா என்றால் ஆமாம். அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தாத்தா இறந்தது குறித்தும், ஆட்டோவில் வந்தது குறித்தும், எனக்கு அடிப்பட்டது குறித்தும், ஆட்டா ஓட்டுநருக்கு அடிப்பட்டது குறித்தும் அதில் இருந்தது. நான் அப்போது இருந்த நிலையில் என்னால் எழுத முடியுமா என்று சாட்சி கேட்கிறார்.

2. இந்த வழக்கு சம்மந்தமாக எழுத படாத 2-3 வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, போலீசார் வந்து கேட்டு அவர்கள் எழுதியதில் தான் கையெழுத்து போட்டேன். மருத்துவமனையில் போலீசார் விசாரித்ததோடு சரி அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அதன் பிறகு நான் சென்னைக்கு போய்விட்டேன், போலீசாரை பார்க்கவில்லை.

3. சேகர் என்பவர் தான் ஆட்டோவை ஓட்டினார் என்றால் சரிதான். சேகர் வாகனம் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சேகர் ஆட்டோவின் உரிமையாளர் அல்ல என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சேகருக்கு லைசன்ஸ் இல்லை என்றும், அவருக்கு வண்டி ஓட்ட தெரியாமல் அவர் தான் போய் விபத்து ஏற்படுத்தினார் என்றால் இல்லை, நாங்கள் ரோட்டை கிராஸ் பண்ணுவதற்காக தான் நின்று கொண்டிருந்தோம்.

4. திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஆட்டோ நின்று கொண்டிருந்தது என்றால் ஆனைவரியிலிருந்து ரோட்டை தாண்டி அரசூர் செல்வதற்காக கட் பண்ணுவதற்காக நாங்கள் நின்று கொண்டிருந்தோம்.அப்போது வந்து வண்டி இடித்துவிட்டது. சாட்சியிடம் எதிர் தரப்பு வழக்கறிஞர் வரைபடத்தை காட்டி சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நடு ரோட்டில் தான் விபத்து நடந்ததா என்றால் நான் முதலிருந்து சொல்கிறேன், நாங்கள் ஆனைவரியிலிருந்து வந்து ஊர் உள்ளே ரைட்டில் செல்வதற்காக வழியில் ரோட்டிலேயே நின்று கொண்டிருந்த போது அவன் எங்கே பார்த்து வந்தானோ என்று தெரியவில்லை, எங்கள் ஆட்டோ மீது மோதியதில் எங்கள் ஆட்டோ 3 சுத்து சுத்தி கீழே விழுந்துவிட்டது.

5. அந்த ஆட்டோவிற்கு பிட்னஸ் சர்விகேட் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆட்டோ சாவிற்கு வந்தது, அதை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. சேகர் ஓட்டி வந்த வாகனம் அவரிடம் தகுதிச்சான்று இல்லை என்றும், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றால் அவரிடம் ஆவணம் இல்லாதது குறித்து எனக்கு எப்படி தெரியும் என்று சாட்சி கேட்கிறார்.

6. ஆட்டோவில் ஏறும் போது நான் தான் ஆட்டோ ஓட்டுநரிடம் லைசன்ஸ் உள்ளதா, தகுதிச்சான்று உள்ளதா என்று கேட்டு தான் நான் ஏறவேண்டும் என்றால் அது எப்படி ஒவ்வொரு ஆட்டோவை நிறுத்தி உங்களிடம் லைசன்ஸ் உள்ளதா, தகுதிச்சான்று உள்ளதா என்று கேட்டு ஏற முடியும், அப்படி யாராவது கேட்டு ஏறுவார்களா என்று சாட்சி கேட்கிறார்.

7. விபத்தின் போது எங்களை இடித்த வண்டி ஓட்டுநரை நான் பார்த்தேனா என்றால் இல்லை, ஆனால் எனக்கு தலையில் அடிப்பட்டு மயக்கம் ஏற்பட்டது, அங்கிருந்த எனது உறவினர்கள் ஓட்டுநரை பிடித்தார்கள். இந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை. அந்த உறவினர்கள் பெயர் தெரியுமா என்றால் சொன்னார்கள் கேள்விபட்டேன், பெயர் தெரியாது, நான் 19 வருடம் கழித்து ஊருக்கு வந்தேன், அதனால் சொந்தக்காரர்கள் பெயர் எனக்கு தெரியாது.

8. விபத்து ஏற்படுத்திய வாகனம், விபத்து ஏற்படுத்திய நபரை நான் போலீசாரிடம் காண்பிக்கவில்லை என்றால் நான் அந்த இடத்தில் இல்லை, ஆஸ்பத்திரிக்கு போய்விட்டேன். இந்த விபத்திற்கு முதல் காரணமே ஆட்டோ ஓட்டி வந்த சேகர் தான் என்றும், அவர் தான் ஆட்டோவிற்கு பர்மிட் இல்லாமல், அவருக்கு லைசன்சும் இல்லாமல் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் கிடையவே கிடையாது, நாங்கள் சின்னிரோட்டில் வந்து அந்த பக்கம் உள்ள ரோட்டை கிராஸ் பண்ணுவதற்காக வந்து நின்று கொண்டிருந்த போது சென்னையிலிருந்து வந்தவர் எங்க பார்த்து கொண்டு வந்தாரா என்று தெரியவில்லை நாங்கள் சென்ற ஆட்டோவின் மீது டம்மார் என்று இடித்துவிட்டார்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 46/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade.III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | மகாலிங்கம் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | கட்டையன் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | 52 |

03.09.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அரசூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வீரன் எனது மாமா. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 12.00-01.00 மணியளவில் எனது மாமா வீரன், அ.சா.1 மற்றும் ஓட்டுநர் சேகர் ஆனைவாரியிலிருந்து அரசூருக்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது சென்னையிலிருந்து திருச்சி மார்க்கமாக வந்த பொலிரோ வெள்ளை மஞ்சள் பெயிண்ட் அடித்தது வந்து ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

2. பின்பு காயமடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அதில் வீரன் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார். ஆட்டோவின் ஓட்டுநருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அ.சா.1ற்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு வீரனின் பிரேதத்தை போலீசார் பிரேத விசாரணை செய்த போது உடனிருந்தேன்.

3. பொலிரோ வண்டியின் பதிவெண் எனக்கு தெரியாது. பொலிரோ வண்டிக்காரர் வண்டியை இடித்துவிட்டு ஓடிவிட்டார். ஆட்டோவின் நெம்பர் தெரியாது. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இறந்தவர் எனது அக்கா வீட்டுக்காரர். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மற்றவர்கள் சொன்னதை வைத்து சொல்கிறேன் என்றால் உண்மையாக நான் பார்த்தேன், நான் அடித்ததை பார்த்தேன், டிரைவர் இறங்கி ஓடிவிட்டார்.

2. போலீசார் விசாரணையில் நான் விபத்தை நேரடியாக பார்த்த விவரத்தை பார்த்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் நஷ்ட ஈடு கோருவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 46/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | ஜே.சி.பி. மெக்கானிக் |
| பெயர். | - | ரமேஷ் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | கணேசன் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | 42 |

03.09.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அரசூரில் வசித்து ஜே.சி.பி. மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வீரன் எனது மாமா. கடந்த 13.02.2019 ந் தேதி சுமார் 12.00 மணியளவில் எனது மாமா வீரன் மற்றும் அ.சா.1 ஆகியோர்கள் ஆனைவாரி கிராமத்திலிருந்து சாவிற்கு வந்துவிட்டு அரசூர் செல்வதற்காக ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்த மஞ்சள் கலர் பொலிரோ ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

2. பின்பு காயமடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மருத்துவமனைக்கு போகும் வழியில் வீரன் இறந்துவிட்டார். பின்பு போலீசார் வீரனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன், ஆட்டோவின் பதிவெண்ணும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணும் , ஓட்டுநர் பற்றியும் எனக்கு தெரியாது. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஆட்டோவை ஓட்டி வந்தது சேகர். அவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை, டெத்திற்கு வந்தவர். முதல் விசாரணையில் சொன்னதை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எப்போது எந்த இடத்தில் சொன்னேன் என்றால் மருத்துவமனையில் வைத்து சொன்னேன். போலீசார் விசாரணையில் இந்த சம்பவத்தை வேறொருவர் சொல்லி தெரிந்துகொண்டதாக சொல்லிவிட்டு நீதிமன்ற விசாரணையில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் நேரடியாக விபத்தை பார்க்கவில்லை என்றாலும், இறந்தவர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பாரதி நகரில் சாவு ஏற்பட்டது, அங்கு நிற்கும் போது அந்த ரோடு கிராஸிங்கில் ஆக்ஸிடண்ட் நடந்ததை நான் பார்த்தேன். பாரதி நகருக்கும், விபத்து நடந்த இடத்திற்கும் 1 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 10 மீ-15 மீ இருக்கும்.

3. பாரதி நகருக்கும், விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்பதால் நான் விபத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் இறந்தவர் எனது உறவினர் தான், நான் டெத் நடந்த இடத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்தேன். விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 46/2023

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | வேலாயுதம் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | திருப்பதியான் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | 55 |

03.09.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அரசூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன வீரன் எனது மாமா. கடந்த 13.02.2019 ந் தேதி சுமார் 12.30 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது பாரதி நகர் அருகே எனது மாமா ஆட்டோவில் வந்து கொண்டிருந்தார். அப்போது சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்த பொலிரோ வாகனம் ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

2. பின்பு காயமடைந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு போலீசார் வீரனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். ஆட்டோவின் பதிவெண்ணும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணும் , ஓட்டுநர் பற்றியும் எனக்கு தெரியாது. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் , கேள்விபட்டு தான் வந்தேன் என்றால் நேரடியாக பார்த்தேன். தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் 500 மீ இருக்கும்.

ஆட்டோவின் நெம்பரும், ஆட்டோவின் ஓட்டுநருக்கு லைசன்ஸ் உள்ளதா, எதிரே வந்து மோதிய வண்டியின் நெம்பரும் எனக்கு தெரியாது.

2. என்னை போலீசார் தனியாக கூப்பிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவுமே தெரியாது என்றாலும், தெரிந்திருந்தால் வண்டியின் எண்ணை சொல்லியிருப்பேன் என்றாலும், இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.